**DEPOSITION OF WITNESS**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 75 /2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW3** | | |
| **Name** | : பொன்ராம் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( A2 present, Others absent 317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.08.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனது மனைவி ஊர் எ.கன்னியம்பட்டி ஆகும். எனக்கு அசா.1, அசா.2 மற்றும் புகார்தாரர் கருப்பசாமி ஆகியோர்களை தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2018ம் ஆண்டு ஒருநாள் சம்பவம் நடந்தது. அன்றையதினம் நான் கன்னியம்பட்டியில் இருந்தேன். அன்றையதினம் காலை நானும், புகார்தாரர் கருப்பசாமியும் குளிப்பதற்காக தோட்டத்திற்கு சென்றோம். ஆஜர் 2ம் எதிரி புகார்தாரரின் கன்னத்தில் அடித்தார். நான் பிரச்சினை வேண்டாம் என்று சொல்லி அவரை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன். பின்பு காலை சுமார் 10:00 மணியளவில் 1,2 எதிரிகளின் அம்மா மற்றும் அவரது தங்கை, அவரது அப்பா ஆகிய எதிரிகள் அங்கு வந்து விளக்கமாறு, உலக்கை, கம்பு ஆகியவற்றுடன் வந்தார்கள், நான் அப்போது புகார்தாரரின் வீட்டில் தான் இருந்தேன். எதிரிகள் வந்தவுடன் புகார்தாரர் கருப்பசாமியை எதிரி முத்துபாண்டி உலக்கையால் அவரது தலையில் அடித்துவிட்டார். அதில் அவருக்கு ரத்த காயம் ஏற்பட்டது.

2. விளக்கமாற்றால் 1,2 எதிரிகளின் அம்மாவும், தங்கையுமான 3,4 எதிரிகள் அசா.1யும், அசா.2யும் அடித்தார்கள். புகார்தாரருக்கு ரத்தம் வந்ததால் நான் சண்டையை விலக்கிவிட்டு காவல் நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு

மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். சுமார் 5 நாட்கள் இறந்துபோன புகார்தாரர் கருப்பசாமி சிகிச்சை எடுத்துக்கொண்டார். எதிரிகள் கருப்பசாமியை எப்போது ஊருக்குள் வந்தாலும் உலக்கையால் அடித்து கொன்றுவிடுவோம் என்று மிரட்டியதால் கருப்பசாமி மனவேதனையால் மருந்தை குடித்து இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** நான் புகார்தாரரின் அக்காவை திருமணம் செய்துள்ளேன், அசா.1 எனது மாமியார், அசா.2 எனது மைத்துனர் கருப்பசாமியின் மனைவி ஆவார். தோட்டத்திற்குள் நடந்த பிரச்சினை சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த பின்பு நான் புகார்தாரரை காவல் நிலையத்தில் வந்து ரத்த காயத்தை காண்பித்துவிட்டு அவரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். காவல் நிலையத்தில் எங்களிடம் மெமோ எதுவும் கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. சம்பவ சமயத்தில் எனது மைத்துனர் கருப்பசாமி ஒட்டன்சத்திரத்தில் தான் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். எதிரி பாண்டீஸ்வரியை எனது மைத்துனர் வீட்டிற்குள் சென்று கையை பிடித்து இழுத்து தகாத முறையில் நடந்து கொண்டதாக ஊரில் பஞ்சாயத்து வைத்து எங்களுக்கு அது சம்பந்தமாக விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். ஆனால் கருப்பசாமிக்கும் அந்த சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை. சம்பவம் நடந்தபின்பு காவல் நிலையம் சென்றபோது என்னிடம் போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்தபோது நான் சம்பவயிடத்தில் இல்லை என்றும் எனது மாமியார், எனது மைத்துனர் ஆகியோருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மைத்துனரை ஊரக்குள் விடாததால் எதிரிகள் மீது எனது மைத்துனர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மைத்துனர் மற்றும் மாமியாருக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் அவர்கள் எதிரிகளை தாக்க சென்றபோது கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயங்கள் என்று சொன்னால் சரியல்ல.

S.d./ Ponram

Taken down be me in open court
Read over to the witness in the

presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.